## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | முனியப்பன் | நாள் | 15.02.2024 |
| தகப்பனார் பெயர் | மாரிமுத்து | | |

**வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

13) இதே நீதிமன்றத்தில் நானும், கோவிந்தம்மாளும் சேர்ந்து என் அண்ணன் குடும்பத்தார் மீதும், அரசு மீதும் என் அண்ணன் மாரியப்பன் என்பவர் இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசு சான்றிதழ் கோரி அ.வ.எண்.107/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் தற்போது இவ்வழக்கிலுள்ள வாதி மாரியப்பனும், அவர் மகன் செல்வராஜீம் மேற்படி வழக்கில் 10, 11 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.107/2022 என்ற வழக்கின் வழக்குரை சார்வு நகல் **வா.சா.ஆ.14(Ex.A.14)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) வாதிகள் குடும்பத்திற்கும், என் குடும்பத்திற்கும் என்ன சம்மந்தம் என்றால், எந்த சம்மந்தமும் இல்லை. அவ்வாறுள்ள நிலையில், 1941ம் வருடத்தில் வாதி குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகபிரிவினை குறித்தோ, வாதி குடும்பத்திற்குள் கடந்த 1965ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.9 குறித்தோ, ஆட்சேபிக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

15) அவ்வாறுள்ள நிலையில் பட்டா எண்.1076, சூரப்பள்ளி கிராமம் சர்வே எண்கள்.252/5, 10, 11 ஆகியவற்றிலுள்ள நிலங்கள் தொடர்பாக, எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், மேற்படி பட்டாவில் மாரிமுத்து மகன் மாரியப்பன் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதை சாதகமாக பயன்படுத்தி, மேற்படி சொத்துக்களை நாங்கள் அபகரிக்க முயற்சிக்கிறோம் என்றால், சரியல்ல. சர்வே எண்.252/5ல் வீடு உள்ளது என கூறி வாதிகள் இவ்வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால், அவ்வாறு எந்த வீடும் இல்லை. வாதி தரப்பில் வீடு உள்ளதை நிரூபிக்க பஞ்சாயத்து தலைவர் மற்றும் கிராம

நிர்வாக அலுவலரை விசாரித்துள்ளனர் என்றால், சரிதான். ஆனால், அவ்வாறு வீடு எதுவும் இல்லை.

16) அரசாங்க தரப்பில் உள்ள அதிகாரிகளே மேற்படி சர்வே எண்ணில் வீடு உள்ளதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், நான் அவ்வாறு எந்த வீடும் இல்லையென வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களின் அமைப்பு குறித்து வாதியின் வழக்குரையுடனே மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு, அதை நீதிமன்றத்தில் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், மேற்படி வரைபடம் தவறானது.

17) சர்வே எண்.252/5 ஐ ஒட்டியவாறு கிழபுறமாக தென்வடல் தடம் ஒன்று செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தடத்தை ஒட்டியவாறு கிழபுறம் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி சர்வே எண்கள்.252/5, 10, 11 ஆகியவற்றின் தென்புறம், கோவிந்தனின் காலியிடம் உள்ளது என்றால், சரியல்ல. புருஷோத்தமன் என்பவரது நிலம் தான் உள்ளது. மேற்படி சர்வே எண்கள்,252/10, 11 ஆகியவற்றை ஒட்டியவாறு மேற்குபுறமாக முனியக்கவுண்டர் என்பவரது நிலம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி முனியக்கவுண்டரின் தந்தை பெயர் என்னவென்றால், தாசாக்கவுண்டர் ஆகும்.

18) மேற்படி முனியக்கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 5 வாரிசுகள். அவர்களது பெயர்கள் 1. மாரியப்பன், 2. பெருமாள், 3. கண்ணுபையன் (எ) வெங்கடாஜலம், 4. சின்னபொண்ணு, 5. பாப்பா ஆகியோர்கள் ஆவர். மேற்படி நபர்களுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் ஏதாவது சம்மந்தம் உள்ளாதா என்றால், இல்லை.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.